பக்கங்கள் 18

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 25 செவ்வாய்க்கிழமை 12.12.2023 அதிர்வு 134

## 2024 வரவு - செலவுத் திட்டம்: நாளை இறுதி வாக்கெடுப்பு

2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு நாளை மாலை 5 மணியளவில் நடைபெறவுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் 04





# இலங்கைக் கடற்படை வெறியாட்டம் இந்திய மீனவர்கள் மூவர் படுகாயம்

### யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதி




(என்.புவியரசன்)

யாழ்ப்பாணம், பருத்தித்துறைக் கடற்பரப்பில் கைதான 25 இந்திய மீனவர்களில் கடற்படையினரின் தாக்குதல் காரணமாகப் பாதிக்கப்பட்ட மூவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கிருஷ்ணராஜ், செமநாதன், சிறிநாத் ஆகிய இந்திய மீனவர்களே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 04

## யாழில் ஊடகவியலாளரின் வீடு புகுந்து மிரட்டிய கும்பல்


### பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டுக்குக் கும்பல் ஒன்று சென்று மரண அச்சுறுத்தல் விடுத்துள்ளது என்று கோப்பாய் பொலிஸ் 04

## இலங்கைக்குக் கடத்தவிருந்த போதை மாத்திரைகள் சிக்கின

### இந்தியக் கடலோரக் காவல் படை அதிரடி நடவடிக்கை



(ந.லோகதயாளன்)

இலங்கைக்குக் கடல் வழியாகக் கடத்தும் நோக்கில் இராமேஸ்வரம் பகுதி கடல் ஊடாக எடுத்து வந்த 13 மூடை போதை மாத்திரைகள் இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. 04

### ஈஸ்டர் தாக்குதல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள

# மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயை கிழக்கின் அடுத்த ஆளுநராக நியமிக்குமாறு கோரிக்கை

### ஜனாதிபதிக்கு வடகிழக்கு முஸ்லிம் பேரவை கடிதம்



(த. தர்மேந்திரா)

கிழக்கு மாகாணத்தின் அடுத்த ஆளுநராக மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயை நியமிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை காத்தான்குடியைப் பிரதான தலைமையகமாகக் கொண்டு இயங்குகின்ற வடகிழக்கு முஸ்லிம் பேரவை கோரியுள்ளது.

இப்பேரவையின் பணிப்பாளர் ஜெ.எல்.எம். ஷாஜகான் இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

“கிழக்கு மாகாணம் சிக்கலான இனத்துவக் கட்டமைப்பைக் கொண்ட மாகாணம் என்பதை தாங்கள் முழுமையாக அறிவீர்கள். கிழக்கு 04

# 3 வருடங்களில் 19 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ள மஹாபொல

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கடந்த மூன்று வருடங்களில் மஹா பொல கொடுப்பனவு 19 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று நாடாளுமன்றில் சுட்டிக்காட்டினார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதார நிபுணர் பேராசிரியர் வசந்த அத்துகோரல 2021, 2022 மற்றும் 2023 ஆகிய வருடங்களில் நடத்திய ஒரு பகுப்பாய்வின் பிரகாரம் மஹபொல மற்றும் உதவித் தொகைக் காக ஒதுக்கப்பட்ட நிதி 19 வீதத்தால் குறைந்துள்ளமை தெரியவந்துள்ளது.



மஹபெல மற்றும் உதவித்தொகை வழங்குவதில் பெரும் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மஹபொல மற்றும் உதவித் தொகைக்கான 19 சதவீத வெட்டு இந்த 3 வருடங்களுக்கும் மேலாகவும் தொடர்ந்து அமுல்படுத்தப்படுமா மற்றும் குறைக்கப்பட பணம் 2024 இல் வழங்கப்படுமா என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார்.

இந்த நிதி இழப்பை மீளப் பெறுவதற்கும், உரிய நேரத்தில் வழங்குவதற்கும் கவனம் செலுத்துமாறும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.



# பிரான்ஸில் திருவள்ளுவர் சிலையை திறந்து வைத்தார் கிழக்கு ஆளுநர்!

(ஹஸ்பர், எஸ்.கீதபொன்கலன் )

பிரான்ஸில் திருவள்ளுவர் திருவுருவச்சிலையைக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்துள்ளார்.

வொரெயால் தமிழ் கலாச்சார மன்றத்தின் ஏற்பாட்டில் பிரான்ஸில் செர்ஜி நகரில் இடம்பெற்ற திருவள்ளுவர் திருவுருவச்சிலை திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துக் கொண்டார்.

இந்த நிகழ்வில் செர்ஜி நகர மேயர் ஜியோன் பவுல் ஜீன்ஸ்டன், இந்தியாவின் பாண்டிச்சேரி மாநிலத்தின் அமைச்சர் லக்ஷ்மி நாராயணன், பிரான்ஸுக்கான இந்திய தூதுவர் ஜவீட் அஷ்ரப், தஞ்சாவூர் தமிழ் பல்கலைகழகத் தலைவர் அயலக கல்வி டாக்டர் குறிஞ்சி வேந்தன் , பிரான்ஸ் நாட்டின் அரசியல், கலாச்சார, இலக்கிய பிரமுகர்கள் மற்றும் பல்வேறுபட்ட நாடுகளை சேர்ந்த அரசியல், கலாச்சார, இலக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.








# சர்வதேச மனித உரிமைகள் தினம்; தமிழர் பிரதேசத்தில் 'துக்க தினம்'!

**(மன்னார் நிருபர்)**

யுத்தம் நிறைவடைந்த தறுவாயில், இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தவர்களின் கதி என்ன என்பதை வெளிப்படுத்துமாறு வலியுறுத்தி வன்னியில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் அமைப்பால், சர்வதேச மனித உரிமைகள் தினம், துக்க தினமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் அனைத்து மனித உரிமை மீறல்களையும் நிறுத்துமாறு கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டு, கிழக்கிலங்கையில் மனித உரிமைகள் தினம் துக்க தினமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அமைப்பினர் போராட்டங்களை நடத்தி, பதினான்கு வருடங்களுக்கு மேலாக காணாமல் போயுள்ள தமது உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று ஒரே குரலில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போரின் முடிவில், இலங்கை பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட, அவர்களது பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் பற்றிய உண்மை எப்போது வெளிவரும் என்பதே போராட்டங்களில் முன்வைக்கப்பட்ட முதன்மையான கேள்வி.

"எமது உறவுகள் எமக்குக் கிடைக்கும்வரை அல்லது எமக்கு நீதி கிடைக்கும்வரை சர்வதேச மனித உரிமைகள் தினம் எமக்குத் "துக்க தினமே" என போரால் அதிகம் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி, போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கைத் தமிழர்களுக்கு நீதியை வழங்கத் தவறியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சமூகத்தால் கூட தமிழ் மக்களாகிய எமக்கு நீதி வழங்க முடியவில்லை, ஏனைய நாடுகளில் குறிப்பாக உக்ரைனில் இடம்பெறும் யுத்தத்துக்குக் கண்ணீர் வடிக்கின்றனர், ஐக்கிய நாடுகள் சபையும் அது தொடர்பிலேயே கவனம் செலுத்துகின்றது. எனினும் இலங்கையில் மாத்திரம் தழிர்கள் கொல்லப்பட்டு கிடங்கில் தள்ளப்படும் வரை பார்த்துக் கொண்டிருந்தார்கள். எனினும் அந்த நேரத்தில் அவர்கள் இதனை கைவிட்டாலும், இந்த நேரத்தில் எமக்கு நீதியை வழங்க அவர்கள் ஏன் தயங்குகிறார்கள்? என்ற கேள்வி எமக்கு எழுகிறது.

வவுனியாவில் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவினர்களுக்கு நீதி கோரி முன்னெடுக்கப்பட்ட தொடர் போராட்டம் டிசெம்பர் 10 ஆம் திகதியுடன் 2,485 நாள்கள் பூர்த்தியாகியுள்து. இந்த நிலையில் மனித உரிமைகள் தினத்தில் போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு "இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது?" என தமிழ், ஆங்கிலம், சிங்கஎம் ஆகிய மொழிகளில் பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

மயிலத்தமடு, மாதவணையில் மேய்ச்சல் தரையை பலவந்தமாக ஆக்கிரமித்துள்ள சிங்கள விவசாயிகளை அகற்றுமாறுக் கோரியும், கிழக்கில் இடம்பெறும் சகலவிதமான மனித உரிமை மீறல்களையும் தடுக்குமாறு வலியுறுத்தியும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு பிராந்திய காரியாலயத்துக்கு முன்பாகச் சிவில் சமூக ஆர்வலர்களின் பங்களிப்புடன் மனித உரிமைகள் தினத்தில் கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்தினம் (10) முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் பாற்பண்ணையாளர்களால் மட்டக்களப்பு சித்தாண்டி பாடசாலைக்கு முன்பாக செப்ரெம்பர் 15 வெள்ளிக் கிழமை ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 87ஆவது நாளாக தொடர்கின்ற நிலையில், மேய்ச்சல் நிலத்தை பலவந்தமாக ஆக்கிரமித்துள்ள சிங்கள விவசாயிகள், 150 இற்கும் மேற்பட்ட மாடுகளைக் கொன்றுள்ளனர் என்று இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட மயிலத்தமடு மாதவனை பால் பண்ணையாளர் சங்கத்தின் தலைவர் சீனித்தம்பி நிமலன் தெரிவித்துள்ளார்.

மாடுகளை தொடர்ச்சியாக சுடுவதும், வெட்டுவதும், களவாடுவதும்தான் வேலையாக இருக்கிறது. அங்கு பொலிஸ் என்ற போர்வையில் ஒன்று போடப்பட்டுள்ளது. மாட்டை சுட்டுவிட்டார்கள் எனக் கூறினால் கரடியனாறு பொலிஸில் சென்று முறையிடுமாறு கூறுவார்கள். பொலிஸில் முறைப்பாடு செய்துவிட்டு சென்று கூறினால் வெறு மனே பார்த்துவிட்டு சும்மா இருக்கிறார்கள்.

(5ஆம் பக்கம் பார்க்க)



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**2024 வரவு - செலவு...**

2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நவம்பர் 13 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

நவம்பர் 14 ஆம் திகதி முதல் நவம்பர் 21 ஆம் திகதிவரை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்றது.

2024 ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு 45 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 122 வாக்குகளும், எதிராக 77 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் உள்ளிட்ட ஆளும் கட்சியினர் ஆதரவாக வாக்களித்தன. ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, டலஸ் அணி, விமல் அணி என்பன எதிராக வாக்களித்தன.

நவம்பர் 22 ஆம் திகதி ஆம் திகதி முதல் குழுநிலை விவாதம் நடைபெற்றது. இந்நிலையில் நாளை 13 ஆம் திகதி புதன்கிழமை வரவு – செலவுத் திட்டம் மீது இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும்.

---

**மேஜர் ஜெனரல்...**

மாகாணத்துக்கு நியமிக்கப்படுகின்ற தமிழ் ஆளுநரை முஸ்லிம்கள் எதிர்ப்பதும், முஸ்லிம் ஆளுநரை தமிழர்கள் எதிர்ப்பதும் சிங்கள ஆளுநரை தமிழ் பேசும் இரு சமூகத்தினரும் எதிர்ப்பதும் கிழக்கின் நிர்வாகத்தை சிறப்பாக கொண்டு நடத்துவதில் பாரிய பின்னடைவுகளை இதுவரையில் ஏற்படுத்தியுள்ளன.

ஆனால், கிழக்கில் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் இதுவரையில் ஸ்ரீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகளே மிகச் சிறப்பாகக் கடமைகளைச் செய்துள்ளனர் என்று மக்களிடையே பதிவாகியுள்ளது. இராணுவ அதிகாரிகள் ஆளுநர்களாகப் பதவி வகித்த காலங்களில் எந்த இனமும் நிர்வாக ரீதியாகப் பாதிக்கப்பட்டது எனப் பதிவுகளைக் காண முடியவில்லை.

ஆகவே, எதிர்காலத்தில் கிழக்குக்கு நியமிக்கப்பட இருக்கும் ஆளுநரை மூன்று இனங்களும் விரும்புகின்ற வகையில், எந்த இனத்தையும் பாதிக்காத முறையில் நீங்கள் நியமிக்க வேண்டும். இப்பதவிக்கு மிகப் பொருத்தமானவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே. இவரை நியமிப்பதன் மூலம் கிழக்கின் சுபீட்சத்துக்கு ஆவன செய்யுறுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.” – என்றுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பந்தமான சதித் திட்டத்தை அரச புலனாய்வுச் சேவையின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே மேல் சுமத்தி ‘சனல் 4’ஆவணப்படம் ஒன்றை வெளியிட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

---

**யாழில்...**

நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள தனது வீட்டுக்கு நேற்று மாலை, ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த 6 பெண்கள் உள்ளிட்ட 20 பேர் அடங்கிய கும்பல், தனது வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து தன்னைத் தாக்க முற்பட்ட போது, அயலவர்கள் கூடியமையால் தாக்குதல் முயற்சியை கைவிட்டு, மரண அச்சுறுத்தல் விடுத்து விட்டு, அந்தக் கும்பல் அங்கிருந்து சென்றது என்று பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் கும்பல் தொடர்பான செய்தி ஒன்று இணையத்தள ஊடகம் ஒன்றில் வெளியாகி இருந்த நிலையில், அதனை அகற்றக் கோரியே அந்தக் கும்பல் மிரட்டியது என்று பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் அந்த முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

---

**இலங்கைக் கடற்படை...**

கடந்த சனிக்கிழமை இரவு எல்லை தாண்டி வந்து பருத்தித்துறை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட 25 இந்திய மீனவர்களைக் கடற்படையினர் படகுகளுடன் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டபோது 7 பேர் மீது கடற்படையினர் தாக்கினர் எனவும், இதில் மூவர் மீது கடும் தாக்குதல் மேற்கோள்ளப்பட்டது எனவும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதையடுத்துப் பாதிக்கப்பட்ட 3 இந்திய மீனவர்களையும் வைத்தியசாலையில் சேர்த்து சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் கோரிய நிலையில், அவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

காரைக்கால் பகுதி படகில் வந்த 13 பேரில் 7 பேர் மீதே கடற்படையினரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. படகின் உரிமையாளரின் முதுகில் அதிக காயங்களும், இன்னுமொரு மீனவருக்குத் தலையில் காயங்களும், மற்றைய மீனவருக்குக் கையில் காயங்களும் காணப்படுகின்றன.

இவ்வாறு காயமடைந்த மூவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்ற அதேநேரம் இந்திய மீனவர்கள் தாக்கினர் என்று தெரிவித்து 3 கடற்படையினரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

---

**இலங்கைக்கு...**

சந்தேகத்துக்கிடமாகப் பயணித்த ஒரு நாட்டுப் படகு மூலம் கடத்த முயன்ற சுமார் ஒரு இலட்சம் போதை மாத்திரைகளை இந்தியக் கடலோரக் காவல் படைகைப்பற்றியுள்ளது.

தமிழகத்தின் வேதாளை குறவன் தோப்பு கடற்கரையில் இருந்து இலங்கைக்குப் பதிவு எண் இல்லாத நாட்டுப் படகில் 13 பண்டல்களில் மேற்படி மாத்திரைகளைக் கடத்த முயன்றபோது கடத்தல்காரர்களை இந்தியக் கடலோரக் காவல் படையினர் மடக்கிப் பிடிக்க முயற்சித்தனர். எனினும், நாட்டுப்படகைக் கரையோரம் நிறுத்திவிட்டு கடத்தல்காரர்கள் தப்பிச் சென்ற நிலையில் நாட்டுப் படகுடன் மாத்திரைகளைக் கரையோரக் காவல் படையினர் கொண்டு சென்றுள்ளனர்.

---





**உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க ஒன்றியத்தின் தேரர்கள் கொழும்பில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பியைச் சந்தித்து இன நல்லிணக்கத்துக்கான இமயமலைப் பிரகடனத்தைக் கையளித்ததுடன் பேச்சும் நடத்தினர்.**



# கட்சித் தலைவரால் அமைக்கப்படும் மத்திய குழு ஊடாகவே செயற்பாடு!

## முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளர் உதுமாலெப்பை தெரிவிப்பு

(கே. எ. ஹமீட் )

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் பிரதேசங்களில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக் கிளைகள் புனரமைக்கப்பட்ட பின் கட்சியின் தலைவரால் அமைக்கப் படும் மத்திய குழுக்கள் ஊடாகவே எதிர்கால செயற்பாடுகள் முன்னெடுக் கப்படும்.

மருதமுனை பிரதேசத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்பது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய முஸ் லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்ச ருமான எம்.எஸ்.உதுமாலெப்பை இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் அம்பாறை மாவட்ட மக்களின் எதிர்ப்பு பேரணி போன்ற நிகழ்வுகளின் போது கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கிமால் அம்பாறை மாவட்டத்தில் விசேட குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவினர் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள சகல முஸ்லிம் கிராமங்களுக்கும் சென்று கட்சியின் மத்திய குழுக்கள் கட்சிப் பிரமுகர்கள், ஆதரவாளர்கள் சந்தித்து கட்சியின் செயற்பாடுகள் தொடர்பாக சகலரினதும் கருத்தை கேட்டறிந்தோம்.

அனேகமான பிரதேசங்களில் மத் திய குழுக்களின் செயற்பாடுகள் தேர்தல் காலங்களில் மாத்திரம் முன்னெடுக் கப்பட்டு வருவதுடன் தேர்தல் முடிந்தால் மத்திய குழுக்கள் தொடர்புகள் இல் லாமல் பல குழுக்கள் ஊடாக செயற் பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக முறைப்பாடு செய்தனர்.

இந்தச் செயற்பாடுகளில் மத்திய குழுக்கள் இருக்கத்தக்கதாக ஒவ்வொரு ஊர்களிலும் சிறு சிறு குழுக்கள் இயங்கி வருவதாகவும் இதனால்த நான் கட்சியின் கட்டமைப்புச் சீர்குலைந்தது. கட்சியின் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கட்சியின் ஆதரவுடனும் மக்களின் வாக்குகளாலும் மக்கள் பிரதிகளாகத் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பி னர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர் கள் மத்திய குழுக்களின் ஆலோசனை கள் பெற்று இயக்க வேண்டும் எனற கோரிக்கையும் மக்களால் முன்வைக் கப்பட்டது.

இது தொடர்பாக அம்பாறை மாவட்ட மக்களின் உணர்வுகளைக் கட்சியின் தலைமைக்கு அறிக்கையாக சமர்பித் தோம். அம்பாறை மாவட்ட மக்களின் உணர்வுகளை ஏற்றுக்கொண்ட கட்சி யின் தலைவர் அவர்கள் நாடு பூராகவும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிஸ் கட்சி கிளைகள், இளைஞர் கிளைகள், மகளிர் கிளைகள் புனரமைக்கப்பட்டு இளைய தலைமுறையினருக்குக் கட்சிச் செயற் பாடுகளில் இணைத்துக் கொள்ளப் பட வேண்டும் என்று பணிப்புரை வழங் கியுள்ளார்.

இதன் அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் டிசெம்பர் மாதம் முடிவதுக் குள் கட்சிக் கிளைகள் புனரமைக்கப்படும் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என தலைவர் பணிப்புரை விடுத்துள்ளார். அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள சகல முஸ்லிம் கிராமங் களிலும் கட்சி புனரமைப்பு செயற்பா டுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடை பெறவுள்ள கட்சியின் பேராளர் மகாநாட்டுக்கு அம்பாறை மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட கட்சி கிளைகள் ஊடாகவே பேராளர்கள் கலந்து கொள்ள ஏற்பாடுகள் முன் எடுக்கப்பட்டு வருகின்றன.-என்றார்.

# சர்வதேச மனித....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படித்தான் எமக்கு நீதி கிடைக் கிறது. நீதி எமக்குக் கிடைக்கப் போவ தில்லை. 153 மாடுகளை இழந்துள் ளோம் எனச் சொன்னால் அதன் பெறு மதியை பாருங்கள். இன்னும் இதற்கு ஒரு முடிவும் இல்லை. ஜனாதிபதி தீர்வைத் தருவதாகச் சொன்னார். எதுவும் நடக்க வில்லை. ஒவ்வொருவரும் இப்படி எம்மை ஏமாற்றுகிறார்கள். யாரிடம் சென்று கூறுவது.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு நீதி வழங்குவதற்கும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கும், கிழக்குத் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்களை நிறுத்துவதற்கும், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட வர்களுக்கு சர்வதேச நீதி வழங்குவதற் கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி பொது மக்கள் துன்புறுத்தப் படுவதை நிறுத்துமாறும், மனித உரி மைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, கோரிக்கைகள் முன்வைக்கப்பட் டுள்ளன.

இதேவேளை, பெண்களின் உரிமை களை வலுப்படுத்துதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அரச சார்பற்ற நிறுவனங்கள் டிசெம்பர் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளி நொச்சி நகரிலும், 11 ஆம் திகதி திங்கட் கிழமை யாழ்ப்பாணத்திலும் போராட்டங்களை முன்னெடுத்திருந்தன.

75 ஆவது சர்வதேச மனித உரிமை கள் தினத்தில் தெற்கில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராட்டங்கள் நடத்தப்பட்டதாக தெரியவில்லை, ஆனால் மனித உரிமைகள் நினைவேந்தல்களும் கூட்டங்களும் டிசெம்பர் 10 மற்றும் 11 ஆகிய திகதிகளில் தலைநகரில் பல பொது அரங்குகளில் நடத்தப்பட்டன.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலின் இரட்டை வேட அரசு

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் எம்.பி., முக்கியமான ஒரு விடயத்தைக் கூறியிருக்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் அவரால் மட்டும் நடத்தப்படுகின்றதா அல்லது வேறு எவரும் பின்னால் இருந்து இயக்குகின்றார்களா என தனக்குப் புரியவில்லை என்று மனோ கணேசன் கூறியிருக்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னைய நிலைப்பாடுகளை இப்போதைய செயற்பாடுகளுடன் ஒப்பிட்டு இந்த கேள்வியை அவர் எழுப்புவதில் ஒரு நியாயம் இருக்கின்றது. கேள்விக்குள்ளேயே உண்மை நிலைமை பற்றிய பதிலும் கூட பொதிந்திருப்பது கவனிக்கத்தக்கது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவி கிட்டுவதற்கு முன்னர் இருந்த ரணில் விக்கிரமசிங்க வேறு. அவரின் சிந்தனை, செயற்பாடு, கருத்து வெளிப்பாடு, கொள்கைப் போக்கு என்பவை எல்லாம் வேறு.

நிறைவேற்றதிகாரம் அவரை அடியோடு மாற்றி விட்டது. இப்போது பழைய ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தில் இல்லை.

அதனால்தான் இதுவரை காலமும் அவருடன் நெருங்கியும் ஒன்றுபட்டும் முரண்பட்டும் அரசியல் செய்த மனோ கணேசனுனக்கு அவரின் இப்போதைய போக்கு ஆச்சரியத்துக்குரியதாக இருக்கின்றது. மனோ கணேசனுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கே அது வியப்பாகத்தான் இருக்கின்றது.

அந்த வியப்பை, அதன் காரணங்களுடன் உணர்ந்து சலிப்புடன் அண்மைக் காலத்தில் இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்துள்ளோம். அந்த வகையைச் சேர்ந்ததுதான் மனோ கணேசனின் இப்போதைய கருத்து வெளிப்பாடும்.

அதிகாரத் திமிர் வந்ததால் தன் போக்கை மாற்றிக் கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனால் பல சமயங்களில் இரட்டை வேடம் போட வேண்டியவராக இருக்கின்றார். முன் பின் முரணாகப் பேசுபவராகவும், செயற்படுபவராகவும் வெளிப்படுகின்றார். இரட்டை வேடப் போக்கின் தவிர்க்க முடியாத கட்டாயங்கள் இவை.

உயிரிழந்த தம் உறவுகளுக்கு நினைவேந்துவதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை உள்ளது. அதனை யாரும் பறிக்கவும் கூடாது, பறிக்கவும் முடியாது என்று அவர் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு - மூத்த சிங்கள ஊடகவியலாளர் ஒருவருக்கு - பேட்டி அளிக்கின்றார்.

சர்வதேச ரீதியில் பெரும் அதிருப்திக்கும் கடும் ஆட்சேபத்துக்கும் உள்ளாகி இருக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை, புதிய மாற்றுச் சட்டத்தைக் கொண்டு வரும் வரையில் இங்கு பயன்படுத்த மாட்டோம் என்று இலங்கை அரசு சர்வதேசத்திற்கு உறுதி கொடுக்கின்றது.

ஆனால், யுத்தத்தில் உயிரிழந்த தமது உறவுகளுக்கு விளக்கேற்றி நினைவேந்த முற்பட்ட தமிழ் மக்கள் - கவனிக்க வேண்டும் அப்பாவி உறவுகள் - பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதாகி, தடுப்பில் வாடுகின்றார்கள்.

இந்த நிலையில் நடப்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமா அல்லது வேறு எவரும் பின்னால் இருந்து அதை இயக்குகின்றார்களா என்ற மனோ கனேசனின் கேள்வி நியாயமானதாகவே படுகின்றது.

ஆனால், அது இரட்டை வேடத் தலைவரான ரணிலின் அரசாங்கம் என்பதால் அப்படிக் குழப்பத்தை ஏற்படுத்துகின்றது அதன் போக்கு. அவ்வளவுதான்...!



# வலுவிழந்தோருக்கு தொழில் வழங்கல் தொடர்பான கூட்டம்

(ஹஸ்பர்)

மாற்றுத் திறனாளிகளைத் தொழில் வாய்ப்புக்கு உட்புகுத்தல் தொடர்பான முன்னேற்ற கூட்டம் மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் இன்று (12) திருகோணமலை மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

ஈ.எஸ்.பி.டி. முகாமையாளர் மற்றும் அதன் உத்தியோகத்தர்கள், சமூக சேவைகள் மாவட்ட இணைப்பாளர் மற்றும் மனித வள உத்தியோகத்தருடன் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 2023 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் 8 சிறந்த திட்டங்கள் மூதூர், கிண்ணியா, தம்பலகாமம், பட்டிணமும் சூழலும் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டது.

17 மாவட்டங்களில் திருகோணமலை மாவட்டம் நான்காம் இடத்திலுள்ளது. மேலும் 2024, 2025 காலப் பகுதியில் திருகோணமலை மாவட்டத்தை முதலாம் இடத்துக்குக் கொண்டு செல்வதிலுள்ள தடைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.



சிறுகதைகளையும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்கங்களையும் கொண்ட இந்தத் தொகுப்பு இலங்கைச் சிறு கதை வரலாற்றில் முக்கிய தடம் பதித்த சிறுகதை ஆசிரியர்கள் பற்றிய குறிப்பையும் கொண்டுள்ளது என்ற வகையில் முக்கியத்துவம் பெறு கின்றது.

நவீன இலக்கிய வளர்ச்சியில் இவரது இலக்கிய பங்களிப்பு விசா லமாக அமைந்துள்ளது. எந்த ஆய் வரங்கிலும் தமது காத்திரமான கட்டு ரைகளை முன்வைத்து ஆற்றுகின்ற உரை புதிய அணுகுமுறைகளைப் பிரதிபலித்து நிற்பதைக் காணலாம். அத்துடன் ஈழத்தில் வெளிவந்த அதிக நூல்களுக்கு அணிந்துரை எழுதிய வரும் இவரே. தனது எழுத்துக்கள் மூலம் பல இளம் படைப்பாளிகளின் இலக்கிய வாழ்வுக்கு உந்து சக்தி யாகவும் விளங்கியவர்.

பேராசிரியர் செ.யோகராசாவின் ஈழத்து இலக்கிய வரலாறு, புகலிட இலக்கியம், போரிலக்கியம், பெண் ணிய இலக்கியம் நாட்டார் இலக்கியம், சிறுவர் இலக்கியம் போன்ற பல்வேறு துறை சார்ந்த இவரது ஆய்வுகள்

# வடமராட்சியில் உதித்து கிழக்கில் பிரகாசித்த பேராசிரியர் செ.யோகராசா

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் மூத்த பேராசிரியர் திரு.செ.யோகராசா கொழும்பில் காலமாகிய செய்தி தமிழ் உலகை மிக்க கவலையுறச் செய் துள்ளது.

பேராசிரியர் செ. யோகராசாவைப் பற்றியும் ஈழத்து இலக்கியப் பரப்பில் அவரது பாரிய பங்களிப்பு பற்றியும் வெறும் எழுத்துக்களில் சுருக்கி விட முடியாது. பேராசிரியர் செ. யோகராசா பல்துறைப் பரிமாணங்களைக் கொண்ட படைப்பாளியாகவும், ஆற் றல் மிக்க ஆய்வாளராகவும், பலரா லும் மதிக்கப்படுகின்ற பண்பாளனா கவும் இருந்து கொண்டு, சிறந்த திறனாய்வாளராக என்றும் உயர்ந்து நிற்கிறார்.

கரவெட்டியைச் சேர்ந்த பேராசிரியர் செ.யோகராசா இளமைக் காலத்தில் கருணை யோகன் என்ற புனை பெயரில் கவிதைகளும், சிறுகதைக ளும் எழுதியுள்ளார்.

பேராசிரியர் செ.யோகராசாவின் தமிழ் இலக்கியப் பணி மிக காத் திரமானது. இதுவரையில் ஐம்பதுக் கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், எட்டு நூல்கள், ஆறு தொகுப்பு நூ ல்களைப் படைத்துள்ளார்.

இவரது நூல்களில் இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண் பாத்திரங்கள், ஈழத்து நவீன இலக் கியம்,ஈழத்து நவீன கவிதை, ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு போன்ற பலநூல்களைப் படைத்துள்ளார்.

கடந்த மூன்று தசாப்த காலத்துக் கும் மேலாக நவீன இலக்கியம் சம்பந்தமான பல்துறை சார்ந்த ஆய் வுக் கட்டுரைகளை வெளிக்கொணர்ந் துள்ளார்.

'ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ் சியம்', 'ஈழத்து சிறுவர் பாடல் களஞ் சியம்' என்ற இவரது நூல்கள் இரண் டையும், ஆழ்ந்த அகன்ற அறிவுக்காய் 'குமரன் புத்தக இல்லம் 'வெளியிட் டுள்ளது.

செ. யோகராசாவின் 'ஈழத்துத் தமிழ் சிறுகதைக் களஞ்சியம்' என் னும் நூல் இலங்கையில் வெளிவந்த மிக முக்கிய, மிகச் சிறந்த சிறு கதைகளின் தொகுப்பாக அமை கின்றது. நூற்றுக்கு மேற்பட்ட

மிகவும் பெறுமதி வாய்ந்தவை.

அத்துடன் 'ஈழத்து நவீன கவிதை புதிய உள்ளடக்கங்கள்– புதிய தரவுகள்– புதிய போக்குகள்' என்ற நூலுக்காகத் தேசிய சாகித்திய விருது 2007 இல் பேராசிரியர் செ. யோகராசா பெற்றுள்ளார். 'பண்டித மணி சி.கணபதிப்பிள்ளை பிரதேச சாகித்திய விருதை 2007இலும், பின்னர் 'ஈழத்து நாவல் வளர்ச்சியும் வளமும்' பிரதேச சாகித்திய விருதை 2008 இலும் பேராசிரியர் செ. யோகராசா பெற்றுள்ளார்.

ஈழத்து எழுத்திலக்கிய உலகின் முக்கிய ஆய்வாளரை, பேராசிரியரை தமிழ் கூறும் நல்லுலகம் இழந் துள்ளது.

சிறுவர் இலக்கியம், சிறுகதை, கவிதை, நாவல் சஞ்சிகைகள் ஆகிய துறைகளில் கொண்ட ஈடுபாடும், அக்கறையும், தேடலும் அவரைச் சிறந்த ஆய்வாளராக தமிழ் இலக்கிய உலகு அறிந்துள்ள பேராசிரியரை தமிழ் கூறும் நல்லுலகம் தற்போது இழந்துள்ளது.



# ‘காலநிலை மாறுபாட்டுக்கான மீள்தன்மையை உருவாக்கல்’

## முல்லைத்தீவு மாவட்டத்தில் செயற்றிட்டம் அங்குரார்ப்பணம்

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று , புதுக்குடியிருப்பு மற்றும் வெலிஓயா ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள வலிமை குறைந்த சமூகங்களின் மத்தியில் காலநிலை மாற்றம் மற்றும் காலநிலை மாறுபாட்டுக்கான மீள்தன்மையை உருவாக்கும் செயற்றிட்டம் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

யு.என். ஹபிற்றாற் நிறுவனத்தின் இந்த அங்குரார்ப்பண நிகழ்வு முல் லைத்தீவு மாவட்ட செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ் வரன் தலைமையில் இடம்பெற்றது.

சமூக பொருளாதார செயற்பாடுகளை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை உள்ளடக்கியதாக இந்தத் திட்டம் அமையவுள்ளது.

இந்தத் திட்டம் 600 மில்லியன் ரூபா செலவில் இரண்டு வருடங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் மிக முக்கிய தேவைகளாக கருத்தப்படும் சிறியளவிலான உட்கட்டமைப்பு வசதி கள், காலநிலை மற்றத்தால் ஏற்படும்



பாதிப்புகளுடன் தொடர்புபட்ட உப்பு நீர் உட்புகுதலை தடுக்கும் அணைகள், குளங்கள் புனரமைப்பு, விவசாயிகள் மற்றும் மீனவ சமுதாயத்தின் வருமான அதிகரிப்புக்கு ஏற்ற வாழ்வாதாரத் துக்கான பயிற்சிகள், உபகரணங்களை வழங்குதல் உட்பட பல விடயங்கள் இந்தத் திட்டத்தில் முன்னெடுக்கப்பட வுள்ளன.

திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.குணபாலன் , வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் திட்டமிடல் எம்.கிருபாசுதன், யு.என். ஹபிற்றாற் நிறுவனச் செயற்றிட்ட முகாமையாளர், பொறியியலாளர் எம்.எஸ்.எம். அலீம், கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் ஆலோசகர், திருமதி. செஜின் கிம், பிரதிச் செயற்றிட்ட முகாமையாளர், எஸ்.எல். அன்வர் கான், மாவட்ட பதில் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. க.ஜெயபாவனி, பிரதேச செயலர்கள், யு.என். ஹபிற்றாற் நிறுவனத்தின் அதிகாரிகள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உயரதிகாரிகள், சமூக மட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.





# மட்டக்களப்பு மாவட்ட கலை இலக்கிய விழா

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டக் கலை இலக்கிய விழா மண்முனை வடக்குப் பிரதேச செயலக டேபா மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீ காந்த் ஒருங்கிணைப்பில் உதவி அரச அதிபர் ஆ.நவேஸ்வரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ் பிரதம அதிதியாகவும், மகரகம தேசிய கல்வி நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளர் முருகு தயாநிதி சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இதன் ஆரம்ப நிகழ்வு மங்கல விளக்கேற்றல், தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து மண்முனை வடக்கு கலாசார மத்திய நிலையம் வழங்கிய வரவேற்பு நடனம் அரங்கேறியது.



இதன்போது மாவட்ட இலக்கியப் போட்டித் தொடர் நிகழ்ச்சியில் முதலிடங்கள் பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மாவட்ட எழுத்தாளர் சங்க உறுப்பினர் திருமதி ரதி தனஞ்சயன் எழுதிய “வாழ்தல் இனிது” சிறுகதை தொகுப்பு வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நூல் நயவுரையை மாவட்ட எழுத்தாளர் சங்க ஆலோசகர் ஜனாப் ஜிஃப்றிஹசனும்,ஏற்புரையை நூலாசிரியை திருமதி ரதி தனஞ்சயனும் நிகழ்த்தினர். நிகழ்வின் இறுதியில் மட்டக்களப்பு மாவட்ட கலாசார அலுவல்கள் உத்தியோகத்தர் ஜனாப் எம்.ஏ.சி. ஜெய்னுலாப்தீன் நன்றியுரையாற்றினார்.





# பாயிஸா பாடசாலைக்கு 25 லட்சம் ரூபா நிதியுதவி!

**(நூருல் ஹுதா உமர் )**

மாணவர்களையும் இளைஞர்களையும் அறிவியல் ஆக்கம் கொண்டவர்களாக, புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்குபவர்களாக, புதிய தொழில் முயற்சிகளை தொடங்குபவர்களாக, ஒன்றிணைந்து இயங்குபவர்களாக, மாற்றவேண்டும் என்ற கருத்துக்களை விதைப்பதோடு அதற்கான உதவிகளையும் கிழக்கின் கேடயம் அமைப்பின் பிரதானி எஸ்.எம். சபீஸ் வழங்கி வருகின்றார்.

மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை எங்கும் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் இணைப்பாடவிதான செயற்பாடுகளை பாடசாலையில் மட்டுமே பெற்றுக் கொள்கின்றனர்.

பெயர் பெற்ற சர்வதேசப் பாடசாலைகள் இணைப்பாட செயற்பாடுகளுக்கே அதிகம் முக்கியத்துவம் அளித்து பாடசாலையின் பெயரை தேசிய மட்டம் மற்றும் சர்வதேச மட்டம் வரை தக்க வைத்துக் கொள்கின்றனர்.

அந்த வகையில் இம்முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளில் மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற அக்ஃபாயிஷா மகா வித்தியாலயத்தில் இணைப்பாட செயற்பாடுகளை ஊக்கப்படுத்தும் முகமாக சர்வதேச பாடசாலைகளில் உள்ள டேபில் டெனிஸ் உள்ளக அரங்கை ஒத்த ஓர் அரங்கைத் தனது குடும்பத்தாரின் உதவியோடு இணைந்து 25 லட்சம் ரூபா செலவில் அமைப்பதற்கு கிழக்கின் கேடயம் பிரதானி எஸ்.எம். சபீஸ் முன்வந்துள்ளார் .

அதன் முதல் கட்ட சந்திப்பு அக்ஃபாயிஷா பாடசாலையின் அதிபர், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் மற்றும் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் போன்றவர்களுடன் இடம்பெற்றது.

# பேருவலை விஸ்டம் சிறுவர்களது போட்டியில் டயமன்ட் சம்பியன்!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலையின் இல்லங்களுக்கிடையிலான சிறுவர் விளையாட்டுப் போட்டி அண்மையில் பேருவளை பேர்கோ புஸ்டால் மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் டயமன்ட் இல்லம் கூடுதலான புள்ளிகளைப் பெற்று 2023 ஆம் ஆண்டுக்கான சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.





# ‘ஊற்று’ சஞ்சிகை வெளியீடு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தால் கல்முனை வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சஞ்சிகைப் போட்டி நடத்தப்பட்டது.

இதனை முன்னிட்டுக் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) தமிழ் மொழிப் பிரிவு மாணவிகளின் சுய ஆக்கங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட “ஊற்று” சஞ்சிகை அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டு வெளியீட்டு வைக்கப்பட்டது.

# நுவரெலியா வலயத்துக்கு உட்பட்ட மாணவர் கல்விக்கு நிதி சேகரிப்பு!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக நிதி திரட்டும் நோக்கில் லிட்டில் இங்கிலாந்து நலன் புரி சங்கத்தால் அச்சிடப்பட்ட நாட்காட்டியின் முதல் பிரதியை நுவரெலியா மாவட்ட செயலர் நந்தன கலபொட வழங்கி வைத்தார்.

கல்விக்காகச் செயற்பட்டு வரும் இந்த நற்பணி மன்றத்தின் 2024ஆம் ஆண்டுக்கான கல்வித் திட்டங்களைச் செயல்படுத்த நிதி சேகரிக்கும் நோக்கில் இந்த நாள்காட்டிகள் அச்சிடப்பட்டுள்ளன.

நுவரெலியா வலயத்துக்கு உட்பட்ட அனைத்துப் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வருடம் முழுவதும் பல்வேறு கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான லிட்டில் இங்கிலாந்து நலன்புரிச் சங்கத்தின் நிகழ்ச்சி திட்டத்தின் ஊடாக பெறப்படும் நிதி 2024 ஆம் ஆண்டு முழுவதும் கல்விக்காக செயல்படுத்தப்படும்.




நாட்காட்டிகள் வழங்கும் நிகழ்வில் லிட்டில் இங்கிலாந்து நலன்புரி சங்கத்தின் தலைவர் ஜே.ஏ.எம். நளீர், அமைப்பாளர் ஊடகவியலாளர் ஆர். எப்.எம்.சுஹேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# கல்முனை, சாய்ந்தமருது பகுதிகளில் குழாய்க் கிணறுகள் அன்பளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சமீபகாலமாக நிலவி வரும் பொருளாதார பிரச்சினை காரணமாக நீர்க் கட்டணங்களால் மிகுந்த அசௌகரியங்களை கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இந்த அசௌகரியங்களை நிவர்த்தி செய்யும் முகமாகக் குழாய்க் கிணறுகள் அமைத்து வழங்கப்பட்டுள்ளன.

வை.எம்.எம்.ஏ. பேரவையின் அனுசரணையில் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும் கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் அவற்றை அமைத்து அன்பளிப்புச் செய்தார்.







# கற்பிட்டி புலாச்சேனை பாடசாலையில் பெற்றோர்களால் மாணவர் கௌரவிப்பு

**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ் )**

கற்பிட்டி புலாச்சேனை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இந் முறை சாதாரண தரப் பரீட்சையில் சித்திய டைந்து உயர்தரம் கற்கத் தகுதி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெற்றது.

'பெற்றோர்களின் கரங்களாலேயே தமது பிள்ளைகள் கௌரவிப்பு' என்ற புதிய பரிமாணத்தின் அடிப்படையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஊர் மக்கள் முன்னிலையில் சாதரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் கற்க தகுதி பெற்ற சகல மாணவர்களையும் அவர்களின் பெற் றோர்களின் கரங்களாளேயே மாலை அணிவித்து கட்டித் தழுவி ஆனந்த கண்ணீர் விட்ட அந்த தருனங்கள் நிகழ்வுக்கு வந்தவர்களின் கண்களிலும் ஆனந்த கண்ணீரை வரவழைத் தது.

பரீட்சையிக்கு தோற்றிய 31 மாணவர்களில் 22 மாணவர்கள் உயர் தரம் கற்கத் தகுதி பெற்று 70.79 சதவீத சித்தியை பதிவு செய்துள்ளனர்.

# புல்மோட்டையில் வாழ்வாதார உதவி முஸ்லிம் எய்ட் நிறுவனம் வழங்கியது

**(ஹஸ்பர்)**

புல்மோட்டையில் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தால் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது 20 மீனவ பயனாளிகள் மீன்பிடி வள்ளங்களையும் உபகரணங் களையும் பெற்றுக் கொண்டனர்.

திருகோணமலை குச்சவெளி பிர தேச செயலகப் பகுதிக்குட்பட்ட பிலால் நகர், சதாம் நகர், பட்டிகுடா ஆகிய கிராமங்களுக்கான முன்மாதிரி கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வாழ்வாதார மேம்பாட்டு திட்டத்தின் ஒரு பகுதியாக முஸ்லிம் எய்ட் ஸ்ரீ லங்கா நிறுவனம் 20 மீனவர்களுக்கு இவற்றை வழங் கியுள்ளது.

2.5 மில்லியன் ரூபா பெறுமதியில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

புல்மோட்டை 4 ஆம் வட்டார கிராம, பொருளாதார உத்தியோகத்தர்கள் மற்றும் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.ஏ.எம். அஸ்வர் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்வாதார உதவி பொருள்களை பயனாளிகளுக்கு வழங்கினர்.






# மாளிகைக்காடு சித்திரக் கண்காட்சி!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மாளிகைக் காடு சபீனா முஸ்லிம் வித்தியாலய ஆசிரியை திருமதி எம்.ஏ.ஆர். பாத்திமா சியானாவின் நெறிப்படுத்தலில் பாட சாலை அதிபர் எம்.ஐ.எம். அஸ்மி தலைமையில் சித்திரக் கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. காரைதீவு கோட்டக் கல்விப் பணிப் பாளரும், கல்முனை வலயக் கல்வி அலுவலக உதவி கல்வி பணிப்பாளரு மான ஏ. சஞ்ஜீவன் இதனைத் திறந்து வைத்தார்.



# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட கஷ்டப் பிரதேச பாடசாலைகளுள் ஒன்றான வீரச்சோலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பால் “ஏழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம் “ திட்டத்தின் கீழ் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.







# மட்டக்களப்பு மெதடிஸ்தமிஷன் பாலர் பாடசாலையின் ஒளிவிழா

(பழுவூரான்)

மட்டக்களப்பு தாண்டவன்வெளி மெதடிஸ்த மிஷன் பாலர் பாடசாலையின் ஒளிவிழாவும், பட்டமளிப்பு விழாவும் தாண்டவன்வெளி செல்வநாயகம் மண்டபத்தில் இடம்பெற்றன.

இதன்போது சிறார்களின் பல்வேறு நடனம், பாடல் மற்றும் நத்தார் தத்தாவின் வருகை போன்றன அரங்கேறின. அத்தோடு அடுத்த ஆண்டு பாடசாலை செல்லவுள்ள மாணவர்கள் கௌரவிக் கப்பட்டனர்.





# விளையாட்டுக் கழகத்துக்கு உபகரணங்கள் கையளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஓட்டமாவடி வளர்பிறை விளை யாட்டுக்கழக கிரிக்கெட் மற்றும் உதைப் பந்தாட்ட அணியினருக்கான விசேட கூட்டமும் விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு நிகழ்வும் கழக தலைவர் ஏ.எல்.எம்.ஏ.காதர் தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கழகத்தின் ஆலோசகர் எம்.ஏ.ஸி.ஜிப்ரீ கரீம் (அதிபர்) , கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர் சறூக் ஜான் மற்றும் அனைத்து நிர்வாக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக ஓய்வுபெற்ற கிராம சேவை அதிகாரியும், ஓட்டமாவடி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமான எம்.எம்.எம்.ஹனீபா கலந்து கொண்டார்.

கழகத்துக்காகத் தொடர்ந்து செய்து வரும் சேவைக்காக கழகத்தின் ஆலோசகர் எம்.ஏ.ஸி.ஜிப்ரீ கரீம் கழகத்தால் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.





# அமெரிக்க விசேட பிரதிநிதி இன்று நுவரெலியா விஜயம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நீதிக்கும் இனத்துவ ஒப்பரவுக்குமான விசேட பிரதிநிதியாக ஐக்கிய அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தில் இருந்து வருகை தந்திருக்கும் டிசைரீ கோர்மியர் ஸ்மித் மற்றும் மலையக அரசியல் அரங்கத்தினர் ஆகியோரிடையேயான சந்திப்பு இன்று (12) நுவரெலியா பீட்ரூ தோட்டத்தில் இடம்பெற்றது.

மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா தலைமையில் அரங்கத்தின் செயலாளர் கிருஷ்ணகுமார், வட்டாரத்தின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஜே.யோகநாதன், இளைஞர் சேவை அதிகாரி இரா. கனகராஜ் பீட்ரூ தோட்ட இளைஞர் கழக உறுப்பினர்கள் தோட்ட மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தோட்ட ஆலய முன்றலில் அரங்கத்தின் செயலாளர் நா. கிருஷ்ணகுமார், சமூகப் பிரிதிநிதி அந்தனி க்ரூஸ் ஆகியோர் ‘Hill country Tamils of Sri Lanka : Analysis of Leagal and Policy issues affecting labour and Governance Structure எனும் ஆய்வறிக்கையை வழங்கி வரவேற்பளித்தனர்.

தோட்ட ஆலயத்துக்கும் மக்கள் குடியிருப்புகளுக்கும் பீட்ரு தமிழ் வித்தியாலயத்துக்கும் விசேட பிரதிநிதி ஸ்மித் அம்மையார் அழைத்துச் செல்லப்பட்டார்.

தமக்கான காணிப் பிரச்சனைகள், தொழில் வாய்ப்பு இன்மை, தொழில்கல்விக்கான வாய்ப்பு இன்மை முதலான விடயங்களை இளைஞர்கள் சுட்டிக் காட்டினர்.

மிகவும் வசதி வாய்ப்புகளற்ற லயன் வீடுகளின் கட்டமைப்பு அவற்றை தாமாகவே தரமுயர்த்திக் கொண்ட மக்களின் முயற்சி எதிர்காலத்தில் வீடு குறித்த அவர்களது எதிர்பார்ப்பு என மக்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

பாடசாலைக்கு விஜயம் செய்த ஸ்மித் அம்மையார் முன்னைய தோட்ட பாடசாலை கட்டமைப்பையும் தற்போதைய அரச பாடசாலை கட்டடத்தையும் பார்வையிட்டார்.








# மாத்தறை மாவட்ட செயலாளர் புத்தளம் பெரிய பள்ளிவாசலுக்கு

(கற்பிட்டி - எம்.எச்.எம் சியாஜ்)

மாத்தறை மற்றும் புத்தளம் பிரதேசங்களுக்கு இடையிலான நல்லிணக்கமும் சகவாழ்வும் நாட்டுக்கு முன்னுதாரணமாக அமைய வேண்டும் என்பதற்கு இணங்க மாவட்டங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு ஊக்குவிப்பு வேலைத் திட்டத்தின் ஒரு அம்சமாக, மாத்தறை மாவட்ட அரச அதிபர் மற்றும் அவரது குழுவினர் மத நல்லிணக்கத்தின் கேந்திர நிலையமான புத்தளம் பெரிய பள்ளிவாசலுக்கு கடந்த வெள்ளிக்கிழமை விஜயம் செய்தனர்.

புத்தளம் பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி. ஹேரத், புத்தளம் மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷேஹ் அப்துல்லா மஹ்மூத் ஆலிம், புத்தளம் சர்வமதக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் புத்தியகம ரத்தன தேரர், தம்ம குசல தேரர் , சிவஸ்ரீ சுந்தரராம குருக்கள், அருட்தந்தை யோஹான் மற்றும் அஷ்ஷேஹ் முஜீப் சாலிஹ் உள்ளிட்ட உறுப்பினர்களால் வரவேற்கப்பட்டனர்.

சர்வமத பிரார்த்தனையுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வின் வரவேற்புரை ரம்யா லங்காவின் பணிப்பாளர் அலி சப்ரி நிகழ்த்தினார்.

தேசிய நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பணியகத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் இந்நிகழ்ச்சித் திட்டமானது மாத்தறை மற்றும் புத்தளம் பிரதேசங்களுக்கு இடையிலான நல்லிணக்கமும் சகவாழ்வும் நாட்டுக்கு ஒரு முன்னுதாரணமாக அமையும் எனவும் இவ்வாறான பயணங்களின் ஊடாக சமூகங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு மேலும் அதிகரிக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

மாவட்ட சர்வமதக் குழு சார்பாக திருமதி முஸ்னியா உவைஸின் உரையும் புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் மற்றும் மாத்தறை மாவட்ட செயலாளர் வை.விக்ரம ஸ்ரீ ஆகியோரின் உரைகளும் இடம்பெற்றன.

அடுத்து வருகை தந்த குழுவினர் புத்தளம் பெரிய பள்ளிவாசல் வளாகத்தை சுற்றிப் பார்த்துடன் அங்கு மேற்கொள்ளப்படும் அன்றாட சமய சடங்குகள் குறித்து அறிந்து கொண்டனர்.

ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னரின் ஆட்சிக் காலத்தில் புத்தளம் பெரிய பள்ளிவாசலுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புகளையும் பள்ளிவாசலில் உள்ள வரலாற்றுக் கால கடிகாரத்தையும் குழுவினர் பார்வையிட்டனர். இவர்களுக்கான விளக்கங்களையும் நெறிப்படுத்தல்களையும் ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் நிஜாம் மற்றும் அஷ்ஷேஹ் முஜீப் சாலிஹ் ஆகியோர் மேற்கொண்டனர்.











# இந்திய மீனவர்களை விடுதலை செய்யக்கோரி தமிழிசை சவுந்தரராஜன் ஜெய்சங்கருக்கு கடிதம்



இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள தமிழகம் மற்றும் காரைக்காலை சேர்ந்த மீனவர்களை விடுவிக்கக்கோரி புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தமிழிசை சவுந்தரராஜன் ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

"இந்த கடிதத்தை மிகுந்த வருத்தத்தோடும் பதட்டத்தோடும் எழுதுகிறேன். காரைக்கால் நடுக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணராஜ் என்பவரது மீன்பிடிப் படகையும், காரைக்கால் பகுதியைச் சேர்ந்த எட்டு மீனவர்கள் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் டிசம்பர் 9 ஆம் திகதி சிறை பிடித்திருக்கிறார்கள்.

மேலும், தமிழகத்தைச் சேர்ந்த மற்றொரு படகையும் அதில் இருந்த 12 மீனவர்களையும் சிறை பிடித்திருக்கிறார்கள்.

சிறைபிடிக்கப்பட்ட அனைவரும் பாதுகாப்பாக திரும்பி வருவார்கள் என்று மீனவர்களின் குடும்பத்தினர் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பாரதப் பிரதமரின் வழிகாட்டுதலோடு மத்திய வெளியுறவு அமைச்சகம் இந்த விவகாரத்தை இராஜதந்திர முறையில் தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன்.

வெளியுறவு அமைச்சகம் இந்த விவகாரத்தில் உடனடியாக தலையிட்டு அப்பாவி மீனவர்களை விடுதலை செய்து அவர்கள் பாதுகாப்பாக அவர்களது குடும்பங்களுக்குத் திரும்ப வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை கடற்படையினால் கைது செய்யப்பட்டுள்ள இந்திய கடற்றொழிலாளர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ் ஜெய்சங்கரிடம் புதுச்சேரியின் முதல்வர் கோரிக்கை விடுத்துள்ளார்.

புதுச்சேரியின் முதல்வர் என்.ரங்கசாமி, கடிதம் ஒன்றின் மூலம் இந்த கோரிக்கையினை முன்வைத்துள்ளார்.

அண்மையில் இலங்கை கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட கடற்றொழிலாளர்களில் 8 பேர் காரைக்காலைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் அவர்களையும் அவர்களது படகுகளையும் இலங்கை அரசாங்கம் விடுவிக்க, தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு என். ரங்கசாமி கோரியுள்ளார்.


# ஜம்மு காஷ்மிர் சிறப்பு அந்தஸ்த்து தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒருதலைபட்சமானது!

## பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் குற்றச்சாட்டு

ஜம்மு – காஷ்மிர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்த்து அளிக்கும் இந்திய அரசியலமைப்பின் 370 ஆவது பிரிவு ரத்து செய்யப்பட்டதை உறுதி செய்யும் இந்திய உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒருதலைபட்சமானது என பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானத்தின்படி, எவரும் பறிக்க முடியாத சுய நிர்ணய உரிமையை காஷ்மீர் மக்கள் பெற்றிருந்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களுக்கு எதிராக தீர்ப்பு வழங்கியதன் மூலம் சர்வதேச சட்டங்களை இந்திய உயர் நீதிமன்றம் மீறியுள்ளதாக அவர்



குறிப்பிட்டுள்ளார்.

இந்திய உயர் நீதிமன்றம் மில்லியன் கணக்கான காஷ்மீர் மக்கள் தியாகத்துக்கு துரோகம் இழைத்துள்ளதெனவும், இந்திய உயர் நீதிமன்றத்தின் இந்த பாரபட்சமான தீர்ப்பினால், காஷ்மீர் போராட்டம் வலுவடையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், காஷ்மீர் மக்களின் உரிமைக்காக குரல் எழுப்பவுள்ளதாகவும் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்து கடந்த 2019 ஆம் ஆண்டு பாரதீய ஜனதா கட்சி அரசால் ரத்து செய்யப்பட்டதையடுத்து, அந்த மாநிலம் இரண்டு பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டது.

இதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யபட்டமை செல்லுபடியாகும் என இந்திய உயர்நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்திருந்தது.

# ரஜினிகாந்துக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறினார் ஸ்டாலின்

"மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் பல வெற்றிப்படங்களைத் தந்து உச்ச நட்சத்திரமாக மக்களை மகிழ்விக்க விழைகிறேன்" என நடிகர் ரஜினிகாந்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நடிகர் ரஜினிகாந்த் இன்று தனது



பிறந்தநாளைக் கொண்டாடுகிறார். இதனையொட்டி அவருக்குப் பிரபலங்கள் பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

அந்தவகையில், தமிழக முதல்வர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "அன்பிற்கினிய நண்பர் "சூப்பர்ஸ்டார்" ரஜினிகாந்துக்கு பிறந்த நாள் வாழ்த்துகள்." என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# காசாவிலேயே நிரந்தரமாக இருக்கும் எண்ணமில்லை!

## இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு



காசாவிலேயே நிரந்தரமாக இருந்துவிடும் எண்ணம் இஸ்ரேலுக்கு இல்லை என்று அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் யோவ் காலன்ட் தெரிவித்துள்ளார்.

மாறாக காசா பகுதியை யார் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பார்கள் என்ற ஆலோசனையில் ஈடுபட இஸ்ரேல் தயாராக இருக்கிறது. காசாவில் அதிகாரம் செலுத்தப்போவது இஸ்ரேலுக்கு விரோதமான குழுவாக இல்லாமல் இருப்பது மட்டும் அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நிரந்தரத் தீர்வுக்காக ஈரான் ஆதரவு ஹெஸ்புல்லாக்களுடன் கூட ஆலோசனை நடத்த இஸ்ரேல் தயாராகவே இருக்கிறது. ஆனால் எல்லை பாதுகாப்புக்கு உரிய உத்தரவாதம் அளித்தால் மட்டுமே அது சாத்தியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஹமாஸை அழிக்க இஸ்ரேல் எந்த மாதிரியான நடவடிக்கையை எடுக்கவும் தயார். ஆனால் அதற்காக நிரந்தரமாக காசாவிலேயே இருந்துவிடும் எண்ணம் இல்லை. ஹமாஸ் குழுவினர் தாமாக முன்வந்து சரணடையலாம். அவ்வாறு சரணடைந்தால் அவர்கள் உயிராவது மிஞ்சும். இல்லாவிட்டால் அவர்களின் விதி எங்கள் கைகளில் என்று தெரிவித்துள்ளார்.

காசாவில் இதுவரை 500 இற்கும் மேற்பட்ட ஹமாஸ் போராளிகளை கைது செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இஸ்ரேல் மீது கடந்த 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் திடீர் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து இஸ்ரேல் பாதுகாப்பு படை காசா நகர் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில், கடந்த மாதம் தற்காலிக போர் நிறுத்தத்தின் போது 80 இஸ்ரேல் பணயக் கைதிகளுக்கு இணையாக 240 பாலஸ்தீனக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இருப்பினும், தெற்கு காசாவின் முக்கிய நகரத்தை இஸ்ரேல் குண்டுவீசித் தாக்கியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் தற்போது இஸ்ரேல் படையினர் நடத்தி வரும் கொடூரத் தாக்குதலுக்கு ஹமாஸ் அமைப்பினரும் பதிலடி கொடுத்து வருகின்றனர்.

# பணயக் கைதிகளில் சிலர் உளவியல் ரீதியாக பாதிப்பு

இஸ்ரேலில் இருந்து ஹமாஸ் அமைப்பினால் கடத்திச் செல்லப்பட்ட பணய கைதிகளில் சிலர் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸ் தடுப்பில் இருந்த போது, அங்கிருந்து தப்பிச் செல்லாது இருப்பதற்காக சிறுவர்கள் உள்ளிட்ட பலருக்கு ஹமாஸ் போதைப்பொருளை வழங்கியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.




சிலர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என ஹமாஸ் தடுப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட பணய கைதிகளுக்கான சிகிச்சை வழங்கும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்தும் அவர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வரும் நிலையில், இந்த நிகழ்வுகள் கடும் மோசமான செயல்கள் எனவும் மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# ஆப்கானிஸ்தானில் தொடரும் நிலநடுக்கங்கள்!

ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து மூன்றாவது நாளாக நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நிலநடுக்கமானது இன்று காலை 7.35 மணியளவில் 120 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.

5.2 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளதாக அந்த நாட்டு தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி ஆப்கானிஸ்தானின் ஹெராத் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

அதனையடுத்து ஒக்டோபர் 13, 15 மற்றும் நவம்பர் 21ஆம் திகதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் 4.8 ரிக்டர் அளவிலும், நேற்று 4.4 ரிக்டர் அளவிலும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து இன்றும் 5.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.